# தருமபுரி மாவட்ட ஆட்சியராக வே. சரவணன் நியமனம்



**தருமபுரி, மே 29:** தருமபுரி மாவட்ட புதிய ஆட்சியராக வே. சரவணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக அரசு, மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட ஐஏஎஸ் அதிகாரிகளின் பணியிட மாறுதல் உத்தரவை வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது. இதில் தருமபுரி மாவட்ட ஆட்சியராக பணியாற்றி வந்த ரெ. சதீஸ், அயலக வாழ் தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நலத் துறை இயக்குநராக சென்னைக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக திருச்சி மாவட்ட ஆட்சியராக இருந்த வே. சரவணன், தருமபுரி மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மின்னணுவியல் துறையில் பொறியியல் இளங்கலைப் பட்டம் பெற்றவர். 2017 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணிக்கு தேர்வானார்.

கடந்த 2025 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதி முதல் திருச்சி மாவட்ட ஆட்சியராக பதவி வகித்து வந்தார். அதற்கு முன்னதாக, திருச்சி மாநகராட்சி ஆணையராகவும், தலைமைச் செயலகத்தில் இணை நிர்வாக இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார்.

# குடிநீர்த் தொட்டி திறப்பு விழா



அரூர் மஜீத்தெருவில் குடிநீர்த் தொட்டியை திறந்துவைத்த எம்எல்ஏ வே. சம்பத்குமார்.

**அரூர், மே 29:** அரூரில் குடிநீர்த் தொட்டி திறப்பு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அரூர் நகராட்சிக்கு உள்பட்ட மஜீத்தெருவில், அரூர் சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 3 லட்சத்தில் மினி குடிநீர் தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரூர் எம்எல்ஏ வே. சம்பத்குமார், குடிநீர்த் தொட்டியை பயன்பாட்டுக்கு தொடங்கிவைத்தார்.

விழாவில் அதிமுக ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர். பசுபதி, நகரச் செயலாளர் பாபு, தொழில் முதலீட்டாளர் சபீர் அகமது, நகராட்சி உறுப்பினர் பூபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# போக்ஸோவில் இளைஞர் கைது

**ஒசூர், மே 29:** ஒசூரை அடுத்த சூளகிரி அருகே 8 ஆம் வகுப்பு மாணவியை இளைஞர் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தலைமறைவாக இருந்த இளைஞரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

சூளகிரி அருகே எட்டாம் வகுப்பு மாணவியை ஆனந்த் என்ற இளைஞர் கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாக ஒசூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக வழக்குப் பதிந்து தலைமறைவான இளைஞரை போலீஸார் தேடிவந்தனர். இந்த நிலையில் வெள்ளிக்கிழமை தலைமறைவாக இருந்த ஆனந்த்தை போலீஸார் பிடித்து போக்ஸோவில் கைது செய்தனர்.

# கிருஷ்ணகிரி, ஒசூரில் சூறைக்காற்றுடன் பலத்த மழை

**கிருஷ்ணகிரி, மே 29:** கிருஷ்ணகிரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளிக்கிழமை சூறைக் காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. நகரின் பல இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்ததால் மின்விநியோகம் பாதிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பகல் நேரங்களில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டாலும், கடந்த சில நாள்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், கிருஷ்ணகிரி, கந்திகுப்பம், காவேரிப்பட்டணம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மாலை 4 மணியளவில் பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு ஆலங்கட்டி மழை பெய்ததால், சிறுவர்கள் மற்றும் பெண்கள் உற்சாகத்துடன் ஆலங்கட்டிகளைச் சேகரித்து விளையாடி மகிழ்ந்தனர். பலத்த காற்றுடன் பெய்த மழையால், நகரின் பல்வேறு இடங்களில் மரக்கிளைகள் முறிந்து மின்கம்பங்கள் மீது விழுந்தன. இதனால், கிருஷ்ணகிரி நகரில் மின்விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. மழையையும் பொருள்படுத்தாமல், மின்வாரிய அலுவலர்களும் ஊழியர்களும் மின்விநியோகத்தை சீரமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இருப்பினும், நகரின் பெரும்பாலான பகுதிகளில் இரவு 9.30 மணி வரை மின்விநியோகம் தடைபட்டது. இதனால், கிருஷ்ணகிரி புறநகர்ப் பேருந்து நிலையம், காவல் நிலையம், பழைய அரசு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு உள்ளிட்ட முக்கிய பகுதிகள் இருளில் மூழ்கின.

மேலும், நகரின் சாலைகளில் மழைநீருடன் கழிவுநீரும் கலந்து பெருக்கெடுத்து ஓடியதால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர். ஆவின் மேம்பாலம் அருகே மழைநீர் குளம் போல் தேங்கியதால் சென்னை, திருவண்ணாமலை, சேலம், பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் மழைநீர் புகுந்ததால் பொதுமக்கள் அவதியுற்றனர். இந்த மழையின் காரணமாக கிருஷ்ணகிரியில் வெப்பம் தணிந்து, குளிர்ந்த காலநிலை நிலவியது.

## ஒசூரில் ரோஜா தோட்ட பசுமைக் குடில்கள் சேதம்





ஒசூரில் சூறைக்காற்றால் சேதமடைந்த பசுமைக் குடில். (வலது) சூளகிரியில் தேசிய நெடுஞ்சாலையில் தேங்கியுள்ள மழைநீரில் செல்லும் லாரி.

ஒசூரில் சூறாவளிக்காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக ரோஜா தோட்டத்துக்கு அமைக்கப்பட்டிருந்த பசுமைக் குடில்கள் சேதமடைந்தன.

ஒசூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 2,000 ஏக்கரில் பல விதமான ரோஜா மலர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கிருந்து இந்தியாவின் உள்நாட்டு தேவைகளுக்கும், வெளி நாடுகளுக்கும் அதிக அளவில் ரோஜா மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பசுமைக் குடில்கள் அமைந்துள்ள விவசாயிகளின் பசுமைக் குடில்கள் சூறாவளி காற்றால் சேதமடைந்து வருகிறது.

வெள்ளிக்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பல்வேறு இடங்களில் ரோஜா தோட்டத்துக்கு பசுமைக் குடில்கள் முற்றிலும் சேதமடைந்தன.

இதுகுறித்து ரோஜா சாகுபடி செய்யும் விவசாயிகள் கூறியதாவது:

ரோஜா மலர்களை சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு ரோஜா பசுமை குடில் அமைத்து பண்ணை அமைக்க ரூ. 65 லட்சம் வரை செலவாகிறது. கடந்த சில நாள்களாக சூறாவளிக் காற்றால் பசுமை குடியில்கள் சேதமடைந்துள்ளது. இதனை சீரமைக்கவே பல லட்சம் தேவைப்படுகிறது.

ரோஜா செடிகளை நடவு செய்வதற்கு சுமார் ரூ. 10 லட்சம் வரை செலவாகிறது.

ரோஜா விவசாயிகளுக்கு கர்நாடக மாநிலத்தில் ஒரு ஏக்கருக்கு சுமார் 80 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. அதேபோல தமிழகத்திலும் வழங்க வேண்டும். சேதமடைந்த ரோஜாபசுமைக் குடிலுக்கு உரிய இழப்பீட்டை தமிழக அரசு வழங்க வேண்டும் என்றனர்.

### குளமான சாலை

ஒசூரை அடுத்த சூளகிரி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் சாலைகளில் மழைநீர் குளம்போல தேங்கி நின்றன.

சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் சூளகிரியை அடுத்த அட்டகுறிக்கி என்னும் இடத்தில் தேசிய நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் மழைநீர் தேங்கி நின்றதால் வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மேலும் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து பார்த்தகோட்ட செல்லும் சாலையில் 2 மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சேதமடைந்ததால் பல்வேறு இடங்களில் மின் தடை ஏற்பட்டது.

# ஜூன் 2, 3 இல் முதியோருக்கான ரேஷன் பொருள்கள் விநியோகம்

**தருமபுரி, மே 29:** தருமபுரி மாவட்டத்தில் ஜூன் 2 , 3 ஆம் தேதிகளில் முதியோருக்கான ரேஷன் பொருள்கள் இல்லம் தேடி விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கூட்டுறவுத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று அவர்களுக்கான ரேசன் பொருள்களை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 70 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அந்தவகையில் மாதந்தோறும் அவர்களது இல்லத்தில் சென்று அரிசி மற்றும் சர்க்கரை உள்ளிட்ட பொதுவிநியோகத் திட்டப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் 1,113 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 35,755 பேர் உள்ளனர். வரும் ஜூன் மாதத்துக்கான ரேஷன் பொருள்கள் 2, 3 ஆம் தேதிகளில் அவர்களது வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனிமவளம் கடத்தல்: நிகழாண்டு 95 வாகனங்கள் பறிமுதல்



மாவட்ட மணல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பேசிய ஆட்சியர் ச. தினேஷ்குமார்.

**கிருஷ்ணகிரி, மே 29:** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிகழாண்டில் கனிமவள கடத்தலில் ஈடுபட்ட 95 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் சட்டம்–ஒழுங்கு, சாலை பாதுகாப்பு மற்றும் மாவட்ட அளவிலான மணல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியதாவது:

தமிழகம் முழுவதும் உள்ள கல்குவாரிகளில் சோதனை நடத்தி விதிமுறைகளை மீறி அளவுக்கு அதிகமாக கற்கள் வெட்டி எடுக்கப்படும் கல்குவாரிகளை உடனடியாக மூடவும், அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதற்காக அபராதம் வசூலிக்க கனிமவளத் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5 கல்குவாரிகள் மற்றும், 2 கிரானைட் குவாரிகள் உள்பட 7 குவாரிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன. குத்தகைகாலம் முடிவுற்று கைவிடப்பட்ட குவாரிகள் மற்றும் குத்தகை உரிமம் வழங்கப்படாத பகுதிகளில் சட்டவிரோதமாக கனிமங்கள் வெட்டியெடுக்கப்படும் குவாரிகளில் வருவாய்த் துறை, கனிமவளத் துறை மற்றும் காவல் துறையினர் மூலம் வாகனத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிகழாண்டில் விதிமுறைகளை மீறி கனிமவளம் கடத்தியதாக ஜனவரி முதல் 5 மாதங்களில் 95 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குவாரிகளில் தொடர் சோதனை மேற்கொள்ளப்பட்டு, அளவிற்கு அதிகமாக கற்களை வெட்டி எடுத்த குத்தகைதாரர்களுக்கு உரிய அபராதத்துடன், குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட உள்ளது என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், ஒசூர் சார்ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

# சாலை விபத்தில் காயமடைந்தவருக்கு உதவிய கிருஷ்ணகிரி ஆட்சியர்

**ஒசூர், மே 29:** கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி அருகே சாலை விபத்தில் காயமடைந்தவருக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் முதலுதவி அளித்து ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், சின்னாறு வளைவு அருகே இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பருகூர் வட்டம், மல்லப்பட்டி ஊராட்சி, வெங்கடாபுரம் கிராமத்தை சேர்ந்த பத்தியப்பா (50) மீது ஒசூரில் இருந்து கிருஷ்ணகிரி நோக்கி சென்ற லாரி மோதியது. இதில் பத்தியப்பா பலத்த காயமடைந்தார்.

இந்தவிபத்து நிகழ்ந்த நேரத்தில் அந்த வழியாக காரில் சென்றுகொண்டிருந்த கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார் உடனடியாக காரை நிறுத்தினார். சாலையில் மயங்கிக் கிடந்த பாத்தியப்பாவை மீட்டு, அவருக்கு முதலுதவி அளித்து ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்.

மேலும், இளைஞருக்கு உடனடி சிகிச்சை அளிக்க மருத்துவமனைக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். இந்த நிகழ்வு சமூக வலைதளங்களில் வைரலானது. இதற்கு பலரும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து குறித்து சூளகிரி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.



சாலை விபத்தில் காயமடைந்தவருக்கு முதலுதவி அளித்த ஆட்சியர் ச. தினேஷ்குமார்.


சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
( SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.ஃபார்ச்சூன் குர்குமினா,** கூட்டாண்மை நிறுவனம், முகவரி : சர்வே எண்.401/1, அத்தனூர், அஞ்சேஹள்ளி (அஞ்சல்), பென்னாகரம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம் - 636813. **உத்தரவாதம் அளித்தவர் 1 : திரு.K.பார்த்திபன், த/பெ.லேட்.கெம்பையன்,** 4/47, அத்தனூர், அஞ்சேஹள்ளி (அஞ்சல்), பென்னாகரம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம் - 636813. **உத்தரவாதம் அளித்தவர் 2 : திருமதி.K.சாரதா, க/பெ.லேட்.கெம்பையன்,** 4/47, அத்தனூர், அஞ்சேஹள்ளி (அஞ்சல்), பென்னாகரம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம் - 636813. **கடன் நிலுவைத் தொகை : 29.05.2026 வரையில் ரூ.2,93,60,584.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 13.01.2023. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 11.06.2024. சொத்து விபரம் :** தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் சார்பதிவு மாவட்டம், பென்னாகரம் தாலுக்கா, அஞ்சேஹள்ளி கிராமம், சர்வே எண்.401/1, விஸ்தீரணம் 2 ஏக்கர் மற்றும் 63 செண்ட். எல்லைகள் கிழக்கு : சர்வே எண்.400/1A-ல் திரு.K.பார்த்திபன் அவர்களுக்கு சொந்தமான நிலம் மற்றும் கொட்டகை, மேற்கு : Sy No 730&731-ல் உள்ள சாலை, வடக்கு : சர்வே எண்.402-ல் உள்ள விவசாய நிலம், தெற்கு : சர்வே எண்.401/2-ல் உள்ள விவசாய நிலம். **காப்பு விலை : ரூ.2,75,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.27,50,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 30.06.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன்.** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 23.06.2026 முதல் 29.06.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 30.06.2026 மதியம் 1.00 மணி வரை. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mob No : 8489903009 , முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **30.06.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 29.05.2026**
**இடம் : ஒசூர்**
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**



**PUBLIC NOTICE**

This is to inform to General Public that My Client **Mrs. Poongodi W/o. Mr. Settu,** residing at No.105/24/1, Sarthar Nagar, Katteri Village, Pakkirithakka Post, Tirupattur Taluk, Tirupattur District - 635853 has represented that she lost her Original Parent Documents i.e., 1. Regd. Sale Deed Doc No.605/1998 dated 28.05.1998 of SRO Jolarpettai, 2. Regd. Sale Deed Doc No.19/2005 dated 05.01.2005 of SRO Jolarpettai, 3. Regd. Sale Deed Doc No.251/2007 dated 07.02.2007 of SRO Jolarpettai, 4. Regd. Sale Deed Doc No.1315/2007 dated 04.05.2007 of SRO Jolarpettai, 5. Regd. Sale Deed Doc No.86/2009 dated 20.01.2009 of SRO Jolarpettai, 6. Regd. Settlement Deed Doc No.986/2018 dated 11.05.2018 of SRO Jolarpettai relating to the property situated in Pakkirithakka Village, Sy.No.215/4, in this Sub Division Sy.No.215/4F1A1A, measuring an extent of 1134 Sq.Feet (or) 105.36 Sq.Mtr of land. In this regard my client who is the Present Owner namely **Mrs. Poongodi W/o. Mr. Settu** filed an online complaint in Tamilnadu Police- CCTNS Citizen Portal Website and got an online acknowledgement bearing reference No.OLC9402600023215 dated 27.05.2026. My client hereby issue notice to the General Public that if any person has in any manner right, title, claim and/or interest in respect of the above mentioned land and found the said misplaced Deeds anywhere, he/she may inform to me or to my client in writing within 7 days from the date of publication of this notice, failing which my client shall treat a Certified True Copies of the above said misplaced Documents as original for further transactions/Alienations. Thereafter no claim will be entertained.

By
**K. Velayudham., M.Sc., M.L.,**
**Advocate & Notary Public,**
**Tirupattur.**
**Mobile-9489903454.**

**Date: 30.05.2026**
**Place: Tirupattur**



**PUBLIC NOTICE**

This is to inform to General Public that My Client **Mr. Madhappan S/o. Mr. Gundan,** residing at Door No.1/51, Colony Chinna Gummanur, Chikkadoranapettam, Palacode Taluk, Dharmapuri District, Tamil Nadu State – 636 806 has represented that he lost the Original Parent Document i.e., Regd. Sale Deed Doc. No.2010/2017 dated 15.11.2017 of SRO Marandahalli relating to the property situated in Marandahalli Village Sy No.60/1, measuring an extent of 1250 Sq Feet of land. In this regard my client who is the Present owner namely **Mr. Madhappan S/o. Mr. Gundan** filed an online complaint in Tamilnadu Police-CCTNS Citizen Portal Website and got an online acknowledgement bearing reference No. LDR No.ID5872649170 dated 29.05.2026. My client hereby issue notice to the General public that if any person have in any manner right, title, claim and/or interest in respect of the above mentioned Land and found the said misplaced Sale Deed anywhere, he/she may inform me or to my client in writing within 7 days from the date of publication of this notice, failing which my client shall treat a certified True Copy of above said misplaced Sale Deed as original for further transactions/Alienations. Thereafter no claim will be entertained.

By
**K.Velayudham., M.Sc., M.L.,**
**Advocate & Notary Public,**
**Krishnagiri.**
**Mobile-9489903448.**

**Date: 30.05.2026**
**Place: Krishnagiri**